

தூத்துக்குடியில் வடகிழக்கு பருவமழை பெய்து வருவதை முன்னிட்டு 2வது நாளாக, திரேஸ்புரம் பகுதி 8வது வார்டுக்கு உட்பட்ட முத்தரையர் நகர், மாதவ நாயர் காலனி 16 வது வார்டு P&T காலனி 14 வது தெரு, கோக்கூர் உள்ளிட்ட இடங்களில் தாழ்வான பகுதிகளில் தேங்கியிருந்த மழை நீரை வெளியேற்ற சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், மாவட்ட தி.மு.க. செயலாளருமான பெ.கீதாஜீவன் உடனடியாக நடவடிக்கை எடுத்ததுடன், இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அப்பகுதி மக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினார். இந்த நிகழ்வின்போது ஆனந்தசேகரன், நிர்மல்ராஜ், பவானி, ரவிச்சந்திரன், மார்ஷல், ஆறுமுகம், நிக்கோலஸ் மணி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் செந்துறை – மாதவரம் புதிய குளிர்சாதன பேருந்து சேவையினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்குமுறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு!

# பல்கலைகளுக்கிடையே ஆரோக்கியமான போட்டியினை உருவாக்கும்!

## சட்டப்பேரவையில் இனிகோ இருதயராஜ் பேச்சு!

சென்னை, அக்.20 -

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்குமுறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய திருச்சி கிழக்கு தொகுதி கழக உறுப்பினர் இனிகோ இருதயராஜ், “இச்சட்ட முன்வடி வால் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டி ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கல்வி நிறுவனங்களுக்கிடையிலான இந்தப் போட்டி மாணவர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும்” என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

இந்தியாவிலேயே உயர் கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. இந்த மசோதா என்பது ஆராய்ச்சிக் கல்வியை ஊக்கப்படுத்தும். கற்பித்தலில் புதிய உச்சங்களைத் தொட ஊக்கப்படுத்தும். இந்திய சமுதாயம் கல்வி அறிவைப் பெற அடித்தளமிட்டவர்கள் Christian missionaries என்பதை எல்லோரும் அறிவோம். அந்த வகையில், இந்த மசோதா சிறுபான்மை யினர் நடத்துகின்ற கல்வி நிறுவனங்கள் தனியார் பல்கலைக்கழகங்களாக மாறுவதற்கு வழி செய்கிறது. ஏற்கெனவே சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் உலகளவில் இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்களோடு tie up செய்து, இங்கிருக்கக்கூடிய மாணவர்களை 1 வருடம் இங்கும், 1 வருடம் அங்கும் என இன்றும் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

Oxford University, Yale University, Cambridge University, Stanford University, Harvard University என பல்வேறு உலகத் தரம் வாய்ந்த university இங்கு அமைவதற்கு அத்தனை வழிகளும் உண்டு. இன்றொன்றையும் பார்த்தீர்களென்றால், இந்த மசோதா 50 இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பல் மருத்துவம் சார்ந்த துணைப் பாடப் பிரிவுகளை, இந்திய மருத்துவப் பாடப் பிரிவு களுக்கேற்றப்படி அரசு ஒதுக்க வேண்டுமென மசோதாவில் தெரியப்படுத்தியிருக்கிறது. இதில் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த மாணாக்கர்களுடைய மருத்துவக் கல்விக் கனவு என்பது சாத்தியப்படுகிறது. அதுமட்டுமல்ல, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கும்போது, கல்வித் தரத்திலும், புதியப் பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்தும்போதும் பல்வேறு universitiesக்கும், நிறுவனங்களுக்குமிடையே



ஆரோக்கியமான போட்டி ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கல்வி நிறுவனங்களுக்கிடையிலான இந்தப் போட்டி மாணவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமல்ல, கட்டணத்தில் தரமான கல்வி கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

இது ஏதோ இந்த மாநிலத்தில் மட்டும் புதிதாக ஆரம்பிக்கப்படுவதாக நினைக்க வேண்டாம். 100 ஏக்கர் என்ற வரைமுறையெல்லாம் மற்ற மாநிலங்களில் குறைத்து பல வருடங்களாக ஆகிவிட்டது. அதனால்தான் பல பல்கலைக்கழகங்கள் அங்கே செல்கின்றன. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அருமையோடு இதை consider செய்து, இங்கே கொண்டு வந்து பல்வேறு வெளிநாடுகளின் பல்கலைக் கழகங்கள் இங்கு வந்து, நம் மாணவர்களுடைய திறனை மேம்படுத்த வேண்டுமென்கிற மிக உன்னதமான திட்டம். அது ஏனோ தெரியவில்லை இந்த மசோதாவை சிறுபான்மையின நிறுவனங் கள் என்றால் தற்போது அ.தி.மு.க.விற்கு தெரியவில்லை.

அறிமுக நிலையிலே எதிர்க்கிறார்கள். சிறுபான்மையினர் சமுதாயம் என்றால் இப்போதெல்லாம் என்ன நிலையில் இவர்களுக்கு, அரசு உதவி பெறும் சிறுபான்மை நிறுவனங் களை (குறுக்கீடு) காரணம் என்னவென்றால், குறிப்பாக சிறு பான்மையின நிறுவனங்களைப் பற்றி, உதவிபெறும் நிறுவனங்களைப் பற்றி குறை சொல்வது, உண்மையிலே university ஆகக் கூடாது என்று நினைக்கிறீர்களா? தற்போது நீங்கள் சேர்ந்த சேர்க்கையினால் இப்படிச் சொல்கிறீர்களா எனக்கு தெரியாது. (குறுக்கீடு)

இந்த அருமையான மசோதாவை, சிறுபான்மையின மக்களின் சார்பாக, அதுவும் குறிப்பாக St. Joseph's College கல்லூரி 182 வருடம் பழமை வாய்ந்த கல்லூரி. (குறுக்கீடு). அந்த St. Joseph's College, University ஆக மாறப்போகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

### விழுப்புரம் மாவட்டத்தில்

# செஞ்சியில் இருந்து மேல் கூடலூர் கிராமத்திற்கு புதிய பேருந்து!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 20 -

விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியம் மேல் கூடலூர் கிராமத்திற்கு புதியபேருந்து சேவை இயக்க வேண்டுமென அக் கிராம மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று செஞ்சியில் இருந்து மேல் கூடலூர் கிராமத்திற்கு புதிய பேருந்து சேவை இயக்கம் நிகழ்ச்சி செஞ்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக செஞ்சி பணிமனை மேலாளர் சுரேஷ் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்.ஏ. கலந்துகொண்டு செஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து மாவட்டம் பாடி, பாலப்பட்டு, தென்பு புதுப் பட்டு, கல்லாலிப்பட்டு, வவ்வால் குன்றம், வழியாக மேல் கூடலூர் கிராமத்திற்கு புதிய பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்கஏழுமலை, வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,

தொ.மு.ச. மத்திய துணைப் பொதுச் செயலாளர் லூர்து இமானுவேல், செஞ்சி பணிமனை தொ.மு.ச. நிர்வாகிகள் அரி கிருஷ்ணன், தியாகராஜன், காதர் நவாஸ், ராஜேந்திரன், தங்கமணி, புருஷோத்தமன், தனசேகர், ஏழுமலை, நிர்வாகிகள்தமிழரசன், நூர்ஜகான் ஜாபர், தொண்டரணி பாஷா,சக்திவேல், இஸ்மாயில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

# “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாம்!

## மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, அக். 20 -

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி சிங்காரப்பேட்டையில் நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாமை கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், பச்சிளம் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துதல், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள் பயனடையும் வகையில் “நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை நாட்களில் தலா 3 முகாம்கள் என 10 வட்டாரங்களில் 30 மருத்துவ முகாம்களும், மாநகராட்சியில் 3 முகாம் என மொத்தம் 33 மருத்துவ முகாம்கள் நடைபெறது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி சிங்காரப்பேட்டையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சைக் கான மருத்துவ ஆலோசனை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், சித்த மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த முகாமில் 2,000 த்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்து சிகிச்சை பெற்றனர். மேலும் இம்மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டன.

மேலும் உயர் சிகிச்சை தேவைப்படுவோர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்படனர்.

தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் இந்த மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகள், கட்டுமான தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளை வழங்கி, மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால் வழங்குவதற்கான அளவுகள் மேற்கொள்ளும் பணிகளை பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின்போது மாவட்ட துணைச் செயலாளர் சந்திரன், பொருளாளர் கதிரவன், ஒன்றியச் செயலாளர்கள் எக்கூர்செல்வம், மூன்றாம்பட்டி.குமரேசன், ரஜினி செல்வம், பேரூர்ப் பொறுப்பாளர் பார்த்திபன் உள்ளிட்ட நிர்வாகிகள், மருத்துவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### இரா.மாரிமுத்து வரவேற்புரை ! நாகை

# நகரக் கழக நிர்வாகிகள் - வார்டு கழக நிர்வாகிகள் கலந்துரையாடல்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை! மு.லோகநாதன் பங்கேற்பு!

நாகை, அக். 20 -

நாகை மாவட்டம் நாகையில் நாகை நகரக் கழக நிர்வாகிகள், வார்டு ச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் மாவட்ட அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நகரக் கழக அவைத் தலைவர் இரா முருகையன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர மன்றத் தலைவர் இரா.மாரிமுத்து வரவேற்றார்.

மாவட்டக் கழகப் பொருளாளர் மூன்று லோகநாதன் நகரக் கழக நிர்வாகிகள் பி.திலகர், சித்ரா குலோத்துங்கன், ஆர்.ரமணி, அபுபக்கர் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என். கௌதமன் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை ஆர்ஆர் குலோத்துங்கன் எஸ்.பால்ராஜ் மாவட்ட சார்பணி துணை அமைப்பாளர்கள் ஆர்.பிரதீப், ஆர்.ஆர்.பாரி, நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்யன் மற்றும் வார்டு கழக செயலாளர்கள் பிரதிநிதிகள் சார்பணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முடிவில் நாகை நகர கழக துணை செயலாளர் வெற்றிலை கடை சிவா நன்றி கூறினார்.

கூட்டத்தில் நாகை நகரத்திற்கு உட்பட்ட 26 வார்டுகளிலும் வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள் தங்கள் வார்டுகளில் உள்ள வாக்குச் சாவடி குழு உறுப்பினர்களை வார்டு கழக நிர்வாகிகளுடன் ஒருங்கிணைத்து

தலைமைக் கழகத்தால் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பேடுகளில் 100 வாக்காளர்கள் பற்றிய விவரங்களை வீடு வீடாகச் சென்று முழுமையாக பதிவு செய்திட வேண்டும் என்றும். இந்த பணியில் பாக நிலை முகவர்கள் இணைத்து பணியாற்றி தங்களுக்கான பணியை சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் 2026 சட்ட மன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளை வெல்வோம் என்பதற்கிணங்க நாகை நகரத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும், வார்டு கழகங்களில் கழக நிர்வாகிகளுடன் இணைந்து கழக அரசின் சார்பில் நாகை நகரத்திற்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்றுள்ள வளர்ச்சிப் பணிகள் மற்றும் மக்கள் நல பணிகள் குறித்தும், கழக அரசின் சாதனைகளான மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வர் திட்டம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், நான் முதல்வன் திட்டம், உள்ளிட்ட பல திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி கழக வெற்றிக்கு உழைத்திடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,குளத்தூர் காமராஜர் நகரில் மகாத்மா காந்தி ஊரக தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.8.33லட்சம் மதிப்பீட்டில் பவர் பிளாக்சாலை மற்றும் சிறிய பாலம் அமைப்பதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சிஅன்னை அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையத்திலிருந்து மேல் கூடலூர் கிராமத்திற்கு புதிய பேருந்து சேவையை மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர்துரை, மாவட்ட கவுன்சிலம் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், செஞ்சி அரசு பணிமனை மேலாளர் சுரேஷ், தொ.மு.ச. நிர்வாகிகள் லூர்து இமானுவேல், அரிகிருஷ்ணன், தியாகராஜன், காதர் நவாஸ் ஆகியோர் உள்ளனர்.